ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2086/19 - 2018 අගෝස්තු මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.08.30

*2086/19 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78* (ix)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

137 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 70ஆ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குறித்துரைக்கப் பட்ட அதிகாரி மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ மற்றும் 70ஈ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 137 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.*

குறித்துரைக்கப்பட்ட அதிகாரி.

கொழும்பு,
*2018, ஓகத்து 28.*

**விதிகள்**

*2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதியிடப்பட்ட 1891/ 9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 2013, ஓகத்து 22 ஆந் திகதியிடப்பட்ட 1824/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண் டின் 1 ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட அதிகாரி (நிறுவகங்களை பட்டம் வழங்கும் நிறுவனங்களாக ஏற்று அங்கீகரிப்பது தொடர்பான தத்துவங்கள்) விதிகள், இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :*

1. இரண்டாம் விதியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"2. இவ்விதிகளுக்கான I ஆம் அட்டவணையிலும் II ஆம் அட்டவணையிலும் தரப்பட்ட வழிகாட்டு நெறிகள் ஆனவை இவ்விதிகளுக்கான III ஆம் அட்டவணையின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறு செய்முறைக் கட்டணம் ஒன்றின் கொடுப்பனவின் மீது ஏதேனும் அரச அல்லது அரச சார்பற்ற நிறுவகத்தினை பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றாக ஏற்று அங்கீகரிப்பதற்கும் ; மற்றும் அத்தகைய நிறுவகத்தினால் பட்டம் அல்லது பட்டங்கள் வழங்குவதற்கான தத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.".



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. ஏழாம் விதியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"7. பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றாக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் பட்டம் அல்லது பட்டங்களை அளிப்பதற்கான தத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்குமான உட்கருத்தைக் கொண்டதும் (இதனகத்துப் பின்னர் "விண்ணப்பதாரர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) ஏதேனும் நிறுவகம் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியிடம், நிறுவனம்சார் மீளாய்வு மற்றும் விடய மீளாய்வுக்காக III ஆம் அட்டவணையில் தரப்பட்டவாறான செய்முறைக் கட்டணக் கொடுப்பனவின் மீது அட்டவணை I மற்றும் அட்டவணை II இல் தரப்பட்டவாறான வழிகாட்டுநெறிகளில் வழங்கப்பட்ட விபரங்களைக் கொண்டுள்ள பகுதி I, பகுதி II ஐக் கொண்ட விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.".

3. பதினான்காம் விதியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"14. விண்ணப்பதாரர், அத்தகைய திருப்பி அனுப்பும் திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியினுள் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்குத் தேவைப்படும் தகவலுடன் சேர்த்து முதலாவது மீளாய்வில் திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பத்தை மீளச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் செய்முறைக் கட்டணம் எதுவும் விண்ணப்பத்தின் முதலாவது மீள் சமர்ப்பிப்பதற்கு விதிக்கப்படுதலாகாது. I ஆம் அட்டவணையில் தரப்பட்ட வழிகாட்டுநெறிகள் இணங்கியொழுகப்படல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட அதிகாரியானவர், மீளச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை மீளவும் கருத்திற்கெடுப்பதற்காக SCAQA இற்கு அனுப்புதலும் வேண்டும்.".

4. இருபதாம் விதியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"20. விண்ணப்பதாரரானவர் விண்ணப்பத்தைத் தேவைப்படுத்தப்பட்ட தகவலுடனும் இவ்விதிகளிற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கவும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அத்தகைய திருப்பி அனுப்பப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதி ஒன்றிற்குள் மீளச் சமர்ப்பிக்கலாம். செய்முறைக் கட்டணம் எதுவும் விண்ணப்பத்தின் முதலாவது மீள் சமர்ப்பிப்பிற்கு விதிக்கப்படுதலாகாது.".

5. முப்பத்திநான்காம் விதியை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகத்தை IV ஆம் பாகம் ஆக உட்புகுத்துவதன் மூலமும் :-

"பாகம் IV

**செய்முறைக் கட்டணம்**

35. நிறுவனம்சார் மீளாய்வு மற்றும் விடய மீளாய்வு என்பன இவ்விதிகளிற்கான III ஆம் அட்டவணையில் தரப்பட்டவாறான செய்முறைக் கட்டணமொன்றிற்கு அமைந்ததாதல் வேண்டும்.

36. இரண்டாம் அல்லது அடுத்துப் பின்னரான மீளாய்வுகளிலான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத ஏதேனும் பட்டம் வழங்கும் நிறுவகம் III ஆம் அட்டவணையின் (ஆ) என்னும் விடயத்தில் குறித்துரைக்கப்பட்ட செய்முறைக் கட்டணங்களின் ஐம்பது சதவீதக் (50%) கொடுப்பனவு ஒன்றிற்கு அமைந்ததாதல் வேண்டும்.

37. கற்கை நிகழ்ச்சித் திட்டமானது, வேறுபட்ட அமைவிடம் ஒன்றில் நடாத்தப்படுகின்றவிடத்து, நிறுவனம் சார் மீளாய்வுக்கான செய்முறைக் கட்டணங்களின் இருபது சதவீதம் (20%) கொடுப்பனவு ஒன்று அத்தகைய வேறுபட்ட அமைவிடத்தை மதிப்பீடு செய்வதற்காக மேலதிகமாக விதிக்கப்படுதல் வேண்டும்.".

6. முப்பத்தைந்தாம் விதியினை 38 ஆம் விதியாக மீள இலக்கமிடுவதன் மூலமும் :

7. மீள இலக்கமிடப்பட்ட 38 ஆம் விதியில், "குறித்துரைக்கப்பட்ட அதிகாரி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணமானது நீக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்குப் பதிலாகப் பின்வருவன இடப்படுதலும் வேண்டும் :

"குறித்துரைக்கப்பட்ட அதிகாரி" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 70ஆ என்னும் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட அதிகாரி ஒருவராக நியமிக்கப்பட்ட ஆள் எனப் பொருள்படும்".

8. இரண்டாம் அட்டவணையினை உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணையினை உட்புகுத்துவதன் மூலமும் :-

**அட்டவணை III**

(அ) நிறுவனம்சார் மீளாய்வுக்கான செய்முறைக் கட்டணங்கள் ரூபா 1,200,000.00

(ஆ) விடய மீளாய்வுக்கான செய்முறைக் கட்டணங்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும் :-

| இலங்கை தகைமைக் கட்டுக்கோப்பு (SLQF) மட்டம் | தகைமை வகை | விதிக்கப்பட வேண்டிய தொகை (ரூபா) |
|---|---|---|
| SLQF மட்டம் இலக்கம் 12 | கலாநிதிப் பட்டம் (PHD) | 750,000.00 |
| SLQF மட்டம் இலக்கம் 11<br>SLQF மட்டம் இலக்கம் 10<br>SLQF மட்டம் இலக்கம் 9 | தத்துவவியல் முதுமாணி மற்றும் முதுமாணிப் பட்டம் | 600,000.00 |
| SLQF மட்டம் இலக்கம் 8<br>SLQF மட்டம் இலக்கம் 7<br>SLQF மட்டம் இலக்கம் 6<br>SLQF மட்டம் இலக்கம் 5 | பட்டப்பின்படிப்பு திப்புளோமா<br>பட்டப்பின் படிப்புச் சான்றிதழ்<br>சிறப்பு இளமாணிப் பட்டம்<br>இளமாணிப் பட்டம் | 500,000.00 |

09-332

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.